1972 சனவரி 29]

கொண்டவர்கள் சரியானபடி விவரங்கள் கொடுக்கப்படாத காரணத்தால் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றும் சொல்லப் படுகிறது. இதில் சில சங்கடங்கள் இருக்கின்றன என்று குறிப் பிட்டிருக்கிறார்கள். என்ன சங்கடம் என்று குறிப்பிட்டால் தனி யாக ஆராய்ந்து, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வீ. இராசகோபால் : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து பி.ஏ., படித்து பி.டி., படிக்க வருகிறவர்களுக்குத்தான் முதற்சலுகை அளித்து வருகிறார்கள். அவர்களுக்கே எல்லா இடங்களும் கொடுக்கப்பட்டுவிடுகின்றன. நேரடியாக பி.ஏ., படித்துவிட்டு, பி.டி., படிக்க வருகிறவர்களுக்கு முற்றிலும் இடம் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, பி.ஏ., படித்து விட்டு, பி.டி., படிக்க வருகிறவர்களுக்கு ஒரு சதவீத அளவில் இடம் ஒதுக்கித்தர அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, கல்வித் துறைக்காக தங்களை பல்லாண்டுக்காலம் அர்ப் பணித்துக் கொண்ட ஆசிரியர்களுக்குத் தகுதி இருந்து, வளர்ச்சி பெற வழியிருந்தால் வசதி செய்துகொடுப்பது நியாயத்தின் அடிப் படையில் எழுந்த ஒன்றாகும். அப்படி வருகிறவர்களை நிறுத்தி விட்டு மற்றவர்களுக்கு வசதி செய்துகொடுப்பது என்பது நியாயத்திற்கு முரணாகும். அவர்கள் உழைப்பின் முயற்சியால் முன்னுக்கு வருகிறார்கள். அப்படி மேலுக்கு வருகிறவர்களுக்கு ஊக்கம் அளிப்பதுதான் நியாயத்தின் கடமை.

Thiruveelimilalai Siva Temple

* 121 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that ancient paintings were discovered at Thiruveelimilalai Siva Temple in Thanjavur destrict by the State Archaeological Department ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாநில தொல்பொருள் ஆய்வுத் துறையினால் திருவீழி மழலையில் கோயில் மண்டபத்தில் மேல் முகட்டில் பண்டைய ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மண்டபம் சோழர் காலத்தில் கட்டப்பட்டது என்பது தூண்களில் உள்ள கல்வெட்டு களால் தெரிகிறது. இம் மண்டபத்தை எழுப்பியவர் உக்கலுடை யான் எதிரொலிச் சோழ பல்லவரையன் என்று காணப்படுகிறது. ஆனால் இங்குள்ள ஓவியங்கள் விஜய நகர காலத்தவையாக காணப் படுகின்றன. மண்டபத்தின் முகடு முழுவதும் ஓவியம் பூசப் பட்டுள்ளது. மத்தியிலுள்ள ஓவியங்கள் இடையில் ஆங்காங்கே

பழுதடைந்துள்ளன. கீழ்ப்பகுதியிலும், மேல் பகுதியிலும் உள்ள ஓவியங்கள் கண்ணனை குழலூதும் கோபாலனாகவும், அரவின்மீது ஆடும் அம்மானாகவும் சித்தரிக்கின்றன. இவை சுமார் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

செங்கம் பகுதியில் பல்லவர் காலக் கல்வெட்டுகள்

* 122 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் பகுதியில் பல்லவர் காலக் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். வட ஆற்காடு மாவட்டம் செங்கம் வட்டத்தில் தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறையால் 12 புதிய கல்வெட்டுக்கள் படியெடுத்து வரப்பெற்றன. இவற்றில் 6 பல்லவர் காலத்தையும் 1 முற்கால சோழர் காலத்தையும் சார்ந்தவை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, we learn from newspapers that a lot of inscriptions were discovered in the Chingleput district during the last few months and these inscriptions throw great light on the history of South India. So, may I know whether the Hon. Minister will instruct the Archaeological Department to publish details about these inscriptions in newspapers for the use of the people who are interested in South Indian history?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராய்ச்சி மூலம் பல இடங்களில் கல்வெட்டுக்களை ஆராய்ந்து, செய்திகளை செய்தித் தாள்களின் மூலமாகப் பரப்பி வருகிறார்கள். அப்படிக் கிடைக்கின்ற குறிப்புக்களை அடிப்படையாக வைத்து தென்னிந்திய வரலாற்றைத் தொகுப்பதற்குப் பயன்படும். குறிப்பாக செங்கத்தில் கிடைத்த 12 கல்வெட்டுக்களில் ஒரு கல்வெட்டில் முக்கியமான பண்டைய வரலாறு ஒன்று பொதிந்திருக்கிறது. அதாவது மகேந்திரவர்மன் 30 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்றுதான் பழைய வரலாறுகள் கூறுகின்றன. ஆனால் கிடைக்கப்பெற்ற கல்வெட்டில் மகேந்திரவர்மன் 59-வது ஆண்டுக்காலம் பற்றிய புதிய குறிப்பு கிடைத்திருக்கிறது. ஆகவே அவன் 60 ஆண்டுக்காலம் வாழ்ந்திருப்பான் என்று தெரிகிறது. அவனுடைய தந்தை சிம்மவிஷ்ணுவைப்பற்றி இதுவரையில் ஒரு குறிப்பும் கிடைக்காமல் இருந்தது. செங்கத்தில் அந்தக் குறிப்பும் கிடைத்திருக்கிறது. மேலும் முதல் பராந்தகன் வரலாறு பற்றிய கல்வெட்டும் கிடைத்திருக்கிறது. மேலும் பல கல்வெட்டுக்களில் பழைய கால போர்க்களக் காட்சிகளும், போர்க்களங்களில் போர் தளபதிகள் போரிட்ட காட்சிகளும், அவர்களுடைய தனித் தன்மையும், அவர்கள் மாண்ட தன்மையும்,